1974 மார்ச் 11]

வாலாந்தூரில் பாதை அமைப்பு.

*358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், வாலாந்தூர் அரிசன தெருவிற்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த வாலாந்தூர் கிராமம் ஒரு தீவைப்போல் இருக்கிறது, அங்கே நடை பாதை, இணைப்புச்சாலை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே இனிமேலாவது அதைப் பரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திலே இணைப்புச்சாலை போட்டுக்கொள்ளலாம் என்று ஒப்புதல் அளித்தால் தான் போடமுடியும்.

மீன்பிடித் தொழில்.

*359 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தும் திட்டம் எதையேனும் அரசு வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவையின் முன்பு ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

வந்தவாசியில் புதிய தொழில்களுக்குச் சலுகை.

*360 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் பின்தங்கிய இடங்களின் சலுகையை வடஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்திற்கு அளிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

@ 108—109-ம் பக்கங்களில் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) : பின்தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளில் மத்திய அரசின் பதினைந்து சதவீத மான்யத்தைத் தவிர ஏனைய சலுகைகள் அனைத்தும் வந்தவாசி வட்டத்திற்கு அளிக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தப் பதினைந்து சதவீத மானியத் தொகை அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியென்பதால் வருகிற ஆண்டிலாவது மத்திய அரசிற்கு பரிந்துரை செய்து, வந்தவாசி, செய்யாறு போன்ற வட்டங்கள் நலன் அடையச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சிறு சிறு பகுதிகள் ஆங்காங்கே பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் கேட்கப்பட்டது. மத்திய அரசாங்கம் மறுத்துவிட்டது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்தச் சலுகையின் அடிப்படையிலே வட ஆர்க்காடு மாவட்டத்திலே எந்த எந்தப் பகுதிகளுக்கு, தாலுக்காக்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. குடியாத்தம் தாலுகா அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அதையும் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், வாலாஜாபேட்டை ஆகிய பகுதிகள். மற்றப் பகுதிகளைப் பொறுத்தளவிற்கு அவர்கள் சொன்னது மாவட்டத்தில் சில இடங்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நாம் சொன்னது இரண்டு மாவட்டங்களையாவது எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கண்டின்யுட்டி இருக்குமென்று சொன்னோம். ஆனால் அவர்கள் பாபுலேஷன், விஸ்தீரணத்தை அடிப்படையாக வைத்து அதிகமாக இருக்கக் கூடாது என்று விதி போடுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சில பாக்கெட்டுகள் இருக்கின்றன. வந்தவாசி, குடியாத்தம், என்று இருக்கின்றன. இவைகளுக்கு அதிகமாக ஜனத் தொகை, விஸ்தீர்ணம், இவையெல்லாம் போகாமல் பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னோம். அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர்அவர்களே, சேலம் மாவட்டம் முழுமையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்ய நம்முடைய அரசினிடத்திலே ஒரு பரிசீலனை இருந்ததே, நாளடைவில் அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் மாவட்டத்தைப்பற்றி அப்படி ஒரு திட்டம் இல்லை. ரூரல் இன்ட்ஸ்ட்ரீஸ் புராஜக்ட்ஸ் என்ற அடிப்படையிலே சில தனிச் சலுகைகள் தரப்படுகின்றன. அது அந்த மாவட்டத்திற்குப் பொருந்தும்.

1974 மார்ச் 11]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்த சப்ஸிடி 10, 15 சதவீதம் என்று கொடுக்கப்படுகிறது. அது தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு இடத்திற்குக்கூட ஒரு தாலூகாவிற்குக் கூடக் கொடுக்கப்படவில்லையே. அமைச்சர் அவர்கள் காடாம்புலியூர் பகுதியிலே இந்த 15 சதவீத அடிப்படையில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென் ஆற்காடு மாவட்டமும் பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பதினைந்து சதவீத முறை எப்படி தரப் படுகிறது என்று ஏற்கனவே நான் சொன்னேன். தென் ஆர்க்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருந்தும் அதிலே சில பகுதிகள் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருந்தும் இந்த 15 சதவீதம் கொடுக்க முடியவில்லை என்பது உண்மை.

கடப்பாக்கத்தில் கயிறு தொழிற்சாலை.

* 361 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் உள்ள கடப்பாக்கம் பகுதியில் "கயிறு தொழிற்சாலை" ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அச்சிறுபாக்கத் தொகுதியிலே அடங்கியுள்ள கடப்பாக்கம் எழில் குலுங்கும் தீவுத் திடலாகும். கேரளத்திலே இருக்கின்ற தீவு போல இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு கயிறு தொழிற்சாலை அமைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று அங்கு வாழ்கின்ற மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கயிறு உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நாம் ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்டின் மூலமாக திட்டங்கள் வைத்திருக்கிறோம். சுமார் ரூபாய் ஒரு லட்சம் வரையில் சிறிய சிறிய தொழில்கள் உருவாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அந்த வகையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகள் அந்தப் பகுதியிலிருந்தும் வந்தால் கவனிக்கப்படும்.

திரு.கே. டி. கே. தங்கமணி : சார், கேரளத்திலே இந்தக் கயிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த மிக விரிவான முறையிலே அந்த அரசாங்கம் உற்சாகம் கொடுத்துக் கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிலே இந்தத்